DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.90/2024**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

| | |
|---|---|
| Name | : பஞ்சவர்ணம் |
| Father/ Husband Name | : சரவணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2வது எதிரி ஆஜர். 1, 3 மற்றும் 4வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.08.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தச்சவயலில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 08.08.2018ம் தேதி மதியம் 01.45மணியளவில் என் கணவர் சாட்சி சரவணன் என்னை போன் செய்து தன்னை எதிரிகள் அனைவரும் அம்மாக்கன்னு மகால் அருகே சருகணி ரோட்டு அருகே அடித்ததாக சொன்னார். எதிரிகள் அடித்ததால் அவருக்கு இடது புருவத்திற்கு மேல் மற்றும் கால், கை நெஞ்சு பகுதியில் காயம் ஏற்பட்டது.

பின்னர் எனது கணவர் மற்றும் எனது மாமானார் சாமிநாதனின் மொபைல் போன் மற்றும் எனது மாமானர் பணமான ரூ.2000/- பணத்தையும் 2வது எதிரி சேவுக பெருமாள் ' சென்றுவிட்டதாக சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். பின்னர் இருவரையும் தேவகோட்டை அரசு

மருத்துவமனையில் சேர்த்தேன். அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆனால் நான் 09.08.2022ம் தேதி புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் எனது கணவர் எனக்கு போன் செய்து சம்பவத்தை பற்றி தகவல் சொன்னார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காணாமல் போனதாக செல்போனை பற்றியும், அதனுடைய மாடல் பற்றியும் மேலும் அதன் ஐஆநுஐ நம்பர் பற்றியும் சொல்லியுள்ளேனா என்றால் நோக்கியா போன் என்று மட்டும் சொல்லியுள்ளேன். வேறு எதையும் பற்றி சொல்லவில்லை.

காணாமல் போனதாக சொல்லப்படும் ரூ.2000/- பணத்தின் வகை முறையைப்பற்றி குறிப்பிட்டு புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும், எதிரிகளும் சம்பவத்திற்கு முன்பே பேசிகொள்ளமாட்டோம் என்றால் சரிதான். நானும், சேவுகபெருமாளும் வார்டு உறுப்பினருக்காக தேர்தலில் நின்றோம் என்றால் இந்த நிகழ்வு சம்பவத்திற்கு பிறகு தான் நடந்தது.

சம்பவ இடத்திற்கு சென்றபோது கம்பு கிடந்தது, ஆனால் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. புகார் மனுவை எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல்நிலையத்தில் எழுதினேன். அதற்கு முன்பே என்னையும், எனது கணவரையும் விசாரித்தார்கள். எனது கணவரிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடமும் வாங்கினார்கள்.

எதிரிகள் மீது உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதாரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எந்த காயமும் இல்லை என்றும், எனது கணவருக்கு காயம் ஏற்பட்டதாக பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் திட்டமிட்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறினேன் என்றால் சரியல்ல. ஆட்டோக்காரரை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். ஆனால் எந்த ஆட்டோ என்று எனக்கு தெரியாது.

நான் சொன்ன இடத்தில் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**1,2 மற்றும் 4வது எதிரி தரப்பில் 3 வது எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.